இணைப்பு XIV.

[..........249-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 390-க்கான விடையைக் காண்க].

விடை : (அ) ஆம்.

(ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், தமிழ் நாடு அரசும் கூட்டாக வழங்கிய நிதியுதவியுடன் 1961-ஆம் ஆண்டு கொடைக்கானலில் ஆப்பிள் பழ மேம்பாட்டுக்காக ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. திட்டக் காலம் ஏற்கனவே முடிந்துவிட்டது. எனினும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிதி உதவியால் பல்கலைக் கழகத்தின் கீழ் ஆப்பிள் பழ மேம்பாடு பற்றிய ஆராய்ச்சிப் பணி தொடர்ந்து நடை பெற்று வருகிறது.

பல்வேறு நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட 120 வகை ஆப்பிள் பழங்கள் கொடைக்கானல் பகுதியில் ஆராய்ச்சி செய்யப்பட்டன. விரைவில் பலனுக்கு வரக்கூடிய இரண்டு இரகங்களான கேரிங்டன், ஐரிஷ்பீச் ஆகியவையும் மூன்று நடுத்தர கால இரகங்களான கொடைக்கானல் 1, விண்டர் பனானா, பார்லின்ஸ் பியூடி ஆகிய வையும் நீண்டகால இரகமான ட்ரோபிகல் பியூட்டியும் கொடைக் கானல் சூழ்நிலையில் நன்கு பலனளித்தன.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் சரிவு மற்றும் குழி ஒட்டு முறை மூலம் நூற்றுக்கு நூறு சதவீதம் வரை ஆப்பிள் மரங்கள் நன்கு வளர்க்கப்பட்டன.

எம். 779 மற்றும் எம்.எம். 110 ஆகியவற்றின் வேர்த் தண்டுகள் ஆப்பிள் மரங்களை வளர்ப்பதற்கு மிகவும் சிறந்து விளங்கின. ஸான்டோவின் 'எ' என்னும் மருந்தை 0·5 சத விகிதம் வீரிய அளவில் ஆலர் 3,000 பி.பி.எம். மருந்துடன் ஆப்பிள் மரங்களில் மொட்டு அரும்புவதற்கு 15 நாட்களுக்கு முன் தெளிப்பதால் மலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பழப்பிடிப்பு ஏற்பட்ட 40-வது நாளில் ஜி.ஏ. 500 பி.பி.எம். என்ற மருந்தோடு ஆலர் 2,000 பி.பி.எம். மருந்து தெளிப்பதால் பார்லின்ஸ் பியூடி இரகத்தில் பழ மகசூல் அதிகரித்தது.

ரோம் பியூடி வகை ஆப்பிள் பழங்களை மூங்கில் கூடையில் மரத்தூளுடன் வைத்துக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவதால் மற்ற முறைகளைவிடக் குறைவான அளவிலேயே சேதம் ஏற் படுகிறது என்பது ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. இதே போல் பார்லின்ஸ் பியூடி பழங்களைக் கூடையில் காகிதங்களுடன் வைத்துக் கட்டி அனுப்புவதால் குறைந்த அளவிலேயே சேதங்கள் ஏற்படுகின்றன என்பதும் அறியப்பட்டுள்ளது.

1979 பிப்ரவரி 12]

தமிழ்நாட்டில் தற்பொழுது கொடைக்கானலில் வாணிக நோக்கத்துடன் ஆப்பிள் பழ மரங்கள் வளர்க்கப்படுகின்றன. தற்போது அப்பகுதியில் ஆப்பிள் மரங்கள் வீட்டுத் தோட்டங்களிலும் சிறு நிலப் பகுதிகளிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் சுமார் 10 ஹெக்டேர் அளவுள்ள நிலப்பரப்பில் ஆப்பிள் சாகுபடி செய்யப்படுகிறது.

கொடைக்கானல் பகுதியில் பார்லின்ஸ் பியூடி என்னும் இரகம் முக்கிய இரகமாகும். நீலகிரியில் ரோம் பியூடி என்னும் இரகம் தான் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. மற்ற இரகங்களான கேரிங்டன், ஐரிஷ் பீச், கொடைக்கானல் 1 போன்றவைகளும் சிறிய அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இணைப்பு XV

[........288—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 459-க்கான விடையைக் காண்க].

விடை :—ஆம்.

தமிழ் நாட்டில் தரம்மிகுந்த பழச் செடிகளை உற்பத்தி செய்து, பயிரிடுவோர்க்கு தக்க காலத்தில் வழங்கும் நோக்குடன் 10 அரசு பழப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இப்பழப் பண்ணைகளில் மாங்கன்றுகள் ஒட்டு முறையில் தயார் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. நடப்பு 1978—79-ம் ஆண்டில் 1,82,000 மாஞ்செடிகளை உற்பத்தி செய்து பயிரிடுவோர்க்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. இவை தவிர புதுக்கோட்டை மாவட்டத்தில் வெம்பன் என்ற இடத்தில் ஏறத்தாழ 1,000 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவில் பழப்பண்ணை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணையின் பெரும் பகுதியில் ' மா ' சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 43,000 மாங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நீலம், பங்களூரா, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீத்தர், போன்ற உயர் ரகங்கள் ஒட்டுமுறையில் பயிரிடப்பட்டுள்ளன. இதே மாவட்டத்தில் குடுமியான் மலையில் ஒரு பழ ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டு வெப்ப பகுதி பழ வகைகள், குறிப்பாக மாம்பழம் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் கார் கால (off season Mango) மா உற்பத்தி பற்றி ஆராய்ச்சி செய்யும் நோக்கத்துடன் பழ ஆராய்ச்சிப் பண்ணை இயங்கி வருகிறது. இங்கு மாம்பழம் ஆண்டு முழுவதும் கிடைக்க வழி வகை செய்வது பற்றி ஆராயப் படுகிறது.